# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 1 ஞாயிற்றுக்கிழமை (14-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:49




வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள் அனைவருக்கும் உதயனின் பொங்கல் வாழ்த்துக்கள்!

# ஜனாதிபதியின் மீது குற்றப் பிரேரணை!

## கொண்டுவர ஐ.தே.க. முஸ்தீபு

கொழும்பு,ஜனவரி14

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது குற்ற விசாரணைப் பிரேரணை (Impeachment Motion) ஒன்றைக் கொண்டுவருவதற்கு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முயற்சி எடுத்து வருகின்றது.**

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிடைக்கா விட்டாலும் உத்தேச அரசமைப்புத் திருத்தத்தை சட்டமாக்குவேன் என்று பாரிஸ் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பகிரங்கமாக உரையாற்றி இருக்கின்றார் என்றும் -

இது தற்போதைய அரசமைப்புக்கு முரணாக - விவாதமின்றி - நடக்கும் ஒரு செயல் என்றும் -

தெரிவித்து, அதன் அடிப்படையில் ஜனாதிபதி மீது குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு ஐ.தே.கட்சியின் உயர் பீடம் தீர்மானித்திருப்பதாகக் கொழும்பு

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கல் விடுமுறை

இன்று பொங்கல் தினத்தை முன்னிட்டு 'உதயன்' ஊழியர்களுக்கு விடுமுறை. அதனால் நாளை 'உதயன்' வெளிவரமாட்டான். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் 'உதயன்' தொடர்ந்து உங்கள் கைகளில் தவழுவான்.

*- நிர்வாகத்தினர்.*

## சுன்னாகத்தில் இன்று இரவு ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.14

சுன்னாகத்தில் இன்றிரவு நடைபெறவுள்ள இன்னிசை நிகழ்ச்சிகளில் மக்கள் கலந்துகொள்ள வசதியாக சுன்னாகம், கந்தரோடை, அளவெட்டி, மல்லாகம் ஆகிய பகுதிகளில் இன்று ஊரடங்கு நீக்கப்பட்டிருக்கும் என்று பலாலி இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. (உ)

## மாத்தளையில் 11தமிழர் கைது

கொழும்பு,ஜன.14

கடந்த வெள்ளியன்று மாத்தளை நகரைச் சுற்றிவளைத்த பொலீஸார் 11 தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

படையினரின் சுற்றிவளைப்பால் நகரில் பொங்கல் வியாபாரம் பாதிக்கப்பட்டது. (உ-6)

## மின் கட்டணங்கள் 20 வீதம் உயரும்?

யாழ்ப்பாணம்,ஜன.14

இலங்கை மின்சாரசபை மின்சாரத்துக்கான கட்டணத்தை இருபது வீதம் உயர்த்தவிருப்பதாக சபையுடன் தொடர்புடைய வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ)

## மட்டக்களப்பில் 23 ஆம் திகதி சமாதானம் வேண்டிப் பேரணி

கொழும்பு ஜன. 14

போர் நிறுத்தம் மற்றும் பேச்சு நடத்த வேண்டி எதிர்வரும் 23ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் பேரணி ஒன்றை நடத்துவது என்று மதங்களுக்கு இடையிலான சமாதான அமைப்பு தீர்மானித்துள்ளது.

கடந்த வியாழனன்று மட்டக்களப்பு பேடினன்ற் மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றின் முடிவிலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

23ஆம் திகதியைப் போர் நிறுத்த தினமாக அனுஷ்டித்து மத வழிபாடுகளையும் நடத்தத் தீர்மானித்திருப்பதாகப் பேரணி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவர் கைதாகி விடுதலை!

யாழ்ப்பாணம்.ஜன.14

17 ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சி தொடர்பான சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் பரவலாகப் பல இடங்களிலும் வைத்துக் கைது செய்யப்பட்டார்கள்.

சில மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு, அடையாள அட்டை மற்றும் விவரங்கள் பதியப்பட்ட பின்னர், அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

அவர்களிடமிருந்த துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

இத்தகைய கைது சம்பவங்கள் மருதனார்மடம், திருநெல்வேலி மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது. இராணுவத்தால் கைது செய் யப்பட்ட 20க்கும் அதிகமான மாணவர்கள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களினால் விடுவிக்கப் பட்டனர்.

இத்தகைய கைது சம்பவங்கள் மற்றும் அஹிம்சை வழியில் கருத்து வெளியிடும் அடிப்படைச் சுதந்திரத்தைத் தடுக்கும் நடவடிக்கைகள் போன்றவை எழுச்சி நிகழ்வை மேலும் உஷாருடன் நடத்துவதற்குத தங்களைத் தூண்டுவதாக மாணவர் பிரதிநிதிகள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தனர். *

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்ச்சியில் பங்குபற்ற மக்களை வருமாறு அழைக்கும் சுவரொட்டிகள் நேற்று பஸ்கள் மற்றும் பொது இடங்களில் பரவலாக ஒட்டப்பட்டன. துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இதேவேளை -

யாழ். பல்கலைக்கழகத்தைச் சுற்றி படையினர் நேற்றுக் காலையில் தேடுதல் நடத்தியதுடன் வீதியில் சென்றவர்களையும் கடுமையாகச் சோதனை செய்தனர். (உ-6)

## எழுச்சி நிகழ்ச்சியை வரவேற்று சமூகத் தலைவர்கள் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.14

சமாதானத்தை வலியுறுத்தியும் ஈழத் தமிழரின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே என்பதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்தியம்பவும் யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு பல தரப்பிலிருந்தும் வாழ்த்தும் ஆதரவும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

### நல்லை ஆதீன முதல்வர்

நல்லை ஆதனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் விடுத்த செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லாச் சமயங்களும் அமைதியையும் சமாதானத்தையுமே வலியுறுத்துகின்றன. தமிழ்ப்பிரதேச சங்கவில் போர் ஓய்ந்து அமைதி பிறக்க எல்லோரும் உழைக்க வேண்டும். அந்த நிலையை எய்துவதற்கு தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டால் அதற்கான வழி பிறக்கும். தமிழ் மக்கள் எல்லோரும் ஒரே குரலில் சாத்வீக முறையில் எடுத்துச் செல்லும் எழுச்சி நிகழ்வு சீரான திறவுகோலாக அமையும்.

### சிவத்தமிழ்ச் செல்வி

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது.

அமைதியை, ஆனந்தமான வாழ்வை விரும்புகின்ற ஒவ்வொருவரும் சமாதானமான வாழ்வை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். எம் தேசத்தில் எப்பொழுது சமாதானம் உருவாகும் என்ற ஆதங்கம் மனித நேயமுள்ள அனைவரிடமும் காணப்படுகிறது. இன்று சமாதானத்துக்கான குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி விட்டது. அனைவரது வேதனைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய சூழ்நிலையை சமூகப் பொறுப்புள்ள அனைவரும் ஏற்படுத்த வேண்டும். எமது இனம் பல உடைமைகளையும் உயிர்களையும் இழந்து தவிக்கின்றது. எம் நாட்டில் அங்கவீனர்களும் ஆதரவற்றவர்களும் அதிகரித்துக் கொண்டு செல்வதை யாவரும் உணரவேண்டும். இந்நிலையில் சமாதானத்தை அனைவரும் ஒருமனதாக உள்ளந்திறந்து கேட்பதை வெளிப்படுத்தும் நிகழ்வாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்விச் சமூகம் சமாதான எழுச்சியை முன்வைத்துள்ளது. தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை வேண்டி முன்வைக்கும் கருத்து தமிழ் மக்களின் கருத்தே.

"அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்க லாகா அரண்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் கருத்துக்கமைய அறிவுலகம், ஆன்மீக உலகம், மனித நேயமுள்ள அனைத்து அமைப்புக்களும் சேர்ந்து விரைவில் எம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என அன்பாக வேண்டிக் கொள்கின்றேன்.

### யாழ். வணிகர் கழகம்

யாழ். வணிகர் கழகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சுயநிர்ணய உரிமை ஒன்றே ஈழத தமிழ்மக்களின் அபிலாஷை என்று தெரிவித்து கடந்த ஆறாம் திகதி 'உதயன்' பத்திரிகை மூலம் வெளியிட்ட அறிக்கையையும் வர்த்தக சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்கான பூரண பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் யாழ்.வர்த்தக சங்கம் வழங்குகின்றது.

தமிழ் மக்களுக்கு கௌரவத்துடன் கூடிய நிலையான சமாதானத்தில் தமது நீண்ட நாள் அபிலாஷை

(16ஆம் பக்கம் பார்க்க)

## எழுச்சி நிகழ்வுக்கு அனுமதி மறுப்பது அப்பட்டமான மனித உரிமை மீறல்!

### கண்டிக்கிறார் கூட்டணி ஆனந்தசங்கரி

கொழும்பு,ஜன.14

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரது ஏற்பாட்டில் நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சிப் போராட்டத்திற்கு படையினர் அனுமதி வழங்க மறுத்துள்ளமை அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் வீ.ஆனந்த சங்கரி. அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சமாதானத்தை வேண்டி நிற்கும் மக்கள் தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்துவதனைத் தடுப்பதற்கு எந்தச் சட்டத்திலும் இடமில்லை. பல்கலைக்கழக சமூகத்தின் எழுச்சிப் போராட்டம் தீவிரவாத நடவடிக்கை அல்ல. பல்கலைக்கழக சமூகத்தினரது இந்த எழுச்சிப் போராட்டத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது முழு ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறது.

இந்தப் போராட்டத்திற்கு படையினர் அனுமதி வழங்கினால்தான் அரசு மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும் - என்றார். (உ-6)

## 17ஆம் திகதிய நிகழ்ச்சியினால் விரும்பத்தகாத பிரச்சினை வரலாம்

### என்கின்றார் பொலீஸ் அதிகாரி

யாழ்ப்பாணம்,ஜன.14

எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்படும் 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சியால் விரும்பத்தகாத பிரச்சினைகள் ஏற்படலாம். பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

- இவ்வாறு எச்சரிக்கை செய்துள்ளார் யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி.

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செலகங்களுக்கு உட்பட்ட கிராம அலுவலர்களுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

'பொங்கு தமிழ்' நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் நடப்பது தொடர்பாக இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்நிகழ்வுக்கு நாம் அனுமதி வழங்கப் போவதில்லை. எமது தடைகளை மீறிச் செயற்பட முற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த பொலீஸார் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும். பாடசாலை மாணவர்களை இந்த நிகழ்வில் கலந்துகொள்ள விட வேண்டாம் என கிராம அலுவலர்களாகிய நீங்கள் அவர்களது பெற்றோர்களிடம் எடுத்துக் கூறுங்கள்

யாழ்.பல்கலைக்கழகத்தினால் மட்டும் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது. இப்படியான நிகழ்வுகள் மூலம் நாட்டில் குழப்பத்தை உண்டாக்குவதே அவர்களின் நோக்கம்.

இந்த நிகழ்வில் விரும்பத்தகாத பிரச்சினைகள் தோன்றலாம். குண்டாந்தடிப் பிரயோகம், கண்ணீர்ப் புகைப் பிரயோகம், துப்பாக்கிச் சூடு ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை கூட ஏற்படலாம்.

எனவே இத்தகைய நிகழ்வுகளில் கலந்துகொள்ள வேண்டாம் என பாடசாலை மாணவர்களையும் ஏனையோர்களையும் நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டும் - என்று தெரிவித்தார்.

இதேவேளை -

சண்டிலிப்பாய் மற்றும் வலி.மேற்குப் பிரதேச கிராம அலுவலர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை மானிப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று நடத்தினார்.

அந்தக் கலந்துரையாடலிலும் பொறுப்பதிகாரி மேற்கண்ட கருத்துக்களை வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-ம-6-175)

# தற்போதைய சமாதான சூழலைச் சாதகமாக்கி முழு அளவிலான போருக்கு தயாராகிறது அரசு

*தற்போதைய இராணுவ – அரசியல் நிலைவரம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 'தமிழ் கார்டியன்'னுக்கு வழங்கியுள்ள பேட்டியின் முழு விவரமும் இங்கு பிரசுரமாகிறது.*

*கேள்வி:-* இன்று ஸ்ரீலங்காவில் நிகழும் அரசியல், இராணுவ நிலைமை பற்றி உங்களின் கருத்து என்ன?

*பதில்:-* இலங்கையின் இன நெருக்கடிச் சிக்கலில் பிரதான பாத்திரத்தை வகிக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையீனமும் சந்தேகமும் காரணமாக பிளவு விரிந்துகொண்டே செல்கிறது. எமது விடுதலை இயக்கம் ஒரு தலைப்பட்சமாக ஒரு மாத காலத்துக்கு போர் நிறுத்தத்தை பிரகடனம் செய்து மிகவும் ஒழுங்காக சமாதானத்தைப் பேணி வருகிறது.

எமது இந்த நல்லெண்ண சமிக்ஞைகளை கருத்தில் எடுக்காது - பொருட்படுத்தாது - சிங்கள ஆயுதப் படைகள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. ஒருதலைப்பட்சமாக நாம் கடைப்பிடித்துவரும் போர் நிறுத்தத்தால் எழுந்த சமாதானச் சூழலைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு யாழ்.குடாநாட்டிலும் வன்னிப் பிரதேசத்திலும் புலிகளது நிலைகள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கத்துடன் ஸ்ரீலங்கா அரசு தனது ஆயுதப் படைகளை முழு அளவிலான போருக்குத் தயார்படுத்தி வருகிறது. யாழ்.போர்க்களத்துக்கு புதிய படையணிகளையும் பீரங்கிகள், டாங்கிகள், பல்குழல் ஏவுகணைச் செலுத்திகள் போன்ற கனரக அழிவு ஆயுதங்களையும் ஸ்ரீலங்கா அரசு அனுப்பி வருகிறது.

கிளாலி, எழுதுமட்டுவாழ், நாகர்கோயில் எல்லையோரமாக நிலைகொண்டுள்ள எமது பாதுகாப்பு அரண்களை ஊடறுத்து ஆனையிறவு நோக்கி நகரும் நோக்குடன் ஒரு பாரிய இராணுவத் திட்டம் வரையப்பட்டுள்ளது. இந்தப் பாரிய தாக்குதலை நடத்த ஸ்ரீலங்கா அரசு முற்படுமென்றால் அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும். இது எதிரிக்குப் பெரும் இரத்தக் களறியை ஏற்படுத்தும் என்பது மட்டுமல்லாமல் போர் என்றும் இல்லாத அளவுக்கு விரிவடையும் சாத்தியமும் இருக்கிறது.

சந்திரிகாவின் ஆட்சிப் பீடத்துக்கு சமாதானத்தில் அக்கறை இல்லை. பேச்சுவார்த்தைகள் மூலமாக பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் அக்கறை கிடையாது. இவர்களுக்கு இராணுவத் தீர்வில்தான் அக்கறையும் நம்பிக்கையும் உண்டு. போராடுபவர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்படும் பாரிய உயிரழிவுகள் பற்றி இந்த ஆட்சிப்பீடம் கவலைப்படுவதேயில்லை.

அரசாங்கத்தின் நோக்கங்களை மதிப்பாய்வு செய்யும்போது சமகால அரசியல் இராணுவச் சூழ்நிலை தெளிவற்றதாகவே காணப்படுகின்றது.

*கேள்வி:-* விடுதலைப் புலிகள் இயக்கம், இராணுவ ரீதியில் பலவீனமடைந்திருப்பதாக அரசாங்க இராணுவ வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது. இப்பலவீனம் காரணமாகவே புலிகள் இயக்கம் சமாதானத்தை நாடுவதாகவும் போரில் ஓய்வெடுத்து மீண்டும் தம்மைப் பலப்படுத்த புலிகளுக்கு கால அவகாசம் தேவைப்படுவதாகவும் பேசப்படுகிறது. இந்த மதிப்பாய்வு பற்றி உங்களின கருத்து என்ன?

*பதில்:-* இந்த மதிப்பாய்வு மிகவும் தவறானது. எமது நேர்மையான நோக்கத்தை அரச தரப்பு தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறது. நாம் ஒரு பலமான தளத்தில் இருந்தே சமாதானத்தை நாடுகின்றோம். இராணுவ ரீதியாக மட்டுமன்றி, தார்மீக ரீதியாகவும் நாம் பலமாக இருக்கின்றோம்.

எமது மக்களின் போராட்ட இலட்சியம் நியாயமானதாக, நீதியானதாக அமையப் பெற்றிருப்பதால் அது எமக்கு தார்மீக பலத்தைத் தருகிறது.

தமிழர்களது இனப்பிரச்சினையானது அடிப்படையில் ஓர் அரசியல் பிரச்சினையே. ஆகவே இந்தப் பிரச்சினையை அரசியல் மார்க்கமாக - அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலமாக - தீர்த்து விடலாம் என்பதில் எமக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. அதனால்தான் நாம் சமாதானத்தை நாடி நிற்கின்றோம். சமாதான வழி மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்குமாறு சர்வதேச சமூகத்தின் மூலம் தெரியப்படுத்தினோம்.

நேர்மையான முறையில் சமாதான வழிமுறையை நாடும் எமது முயற்சியை சர்வதேச சமூகம் வரவேற்கும் என்பதில் எமக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கின்றது.

### தந்திரோபாய பின்நகர்வு

*கேள்வி:-* யாழ்ப்பாணத்தில் சமீப காலத்தில் நீங்கள் சந்தித்த பின்னடைவுகளின் அடிப்படையில் உங்களது இயக்கம் இராணுவ ரீதியாகப் பலவீனப்பட்டு இருக்கலாம் என அரசாங்கம் கருதியிருக்கலாம். இதுபற்றி உங்களின் கருத்து என்ன?

*பதில்:-* யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி மற்றும் அரியாலைப் பிரதேசங்களில் நாம் சில குறிப்பிட்ட காரணங்களுக்காக தந்திரோபாயப் பின்நகர்வை மேற்கொண்டிருந்தோம். ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தம் செய்து, சமாதானத்தை பேணியவாறு பெரிய அளவில் எதிர்தாக்குதல்களை நடத்துவது என்பது நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல.

அடுத்தபடியாக இந்தப் பகுதிகளில் ஒரு பாதுகாப்பான யுத்தத்திற்கு அனுகூலமான நிலப்பரப்பும் கிடையாது. திறந்த வெளிப்பகுதிகளைக் கொண்ட இந்தப் பிரதேசங்களில் வான்தாக்குதல்களுக்கு எமது போராளிகள் அநியாயமாகப் பலியாகலாம். அத்துடன் பூநகரிப் பகுதியில் இருந்து கடல்நீரேரியைக் கடந்து போராளிகளையும், ஆயுதங்களையும் கொண்டு செல்வதில் பல சிக்கல்களும் இருக்கின்றன.

இத்தகைய காரணங்களுக்காகவும் குறிப்பாக எமது போராளிகள் மத்தியில் உயிர்ச்சேதம் ஏற்படுவதைத தவிர்க்கும் நோக்கத்துடனும் நாம் இந்தப் பகுதிகளில் இருந்து தந்திரோபாய பின்நகர்வை மேற்கொள்வது என்று முடிவெடுத்தோம்.

இதனை யாராவது பலவீனம் என்று கருதினால் அது தவறான பார்வை என்பதையும் குறிப்பிடுகின்றோம்.

*கேள்வி:-* ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்த திங்கள் இரவு தமிழ் மக்களுக்கு விடுத்த நீண்ட உரையில் விடுதலைப் புலிகளை சமாதான விரோதிகள் எனத் திட்டித் தீர்த்திருக்கிறார். தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகளுக்கும் புலிகளே காரணகர்த்தா எனவும் கடுமையாகச் சாடி இருக்கிறார். காரசாரமான இந்த உரையில் உங்களது ஒருதலைப்பட்சமான போர் நிறுத்த அறிவிப்பை அவர் நிராகரித்தது மட்டுமன்றி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் உங்களுக்கு அக்கறையில்லை எனவும் குற்றஞ்சாட்டி இருக்கிறார். இதற்கு நீங்கள் கூறும் பதில் என்ன?

*பதில்:-* பொய்களும் புரட்டுக்களும் வெறுமையான அர்த்தமற்ற வார்த்தைக் குவியல்களும் அடங்கிய பெரியதொரு பொதியாகவே சந்திரிகாவின் உரையை நாம் வர்ணிக்க முடியும். இதில் எமது மக்களுக்கு பயனுடையதாக எதுவுமே கிடையாது. இந்த உரையில் சந்திரிகா தமது அரசாங்கத்தை நன்னெறிப் பண்பின் திருவடிவமாகவும் நீதியையும் சமத்துவத்தையும் கடைப்பிடித்து சிறுபான்மை சமூகத்தவர்களது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாத்துவரும் ஒரு சிறந்த ஆட்சிப் பீடமாகவும் வர்ணிக்கின்றார்.

அத்துடன் வடக்கில் கோடி கோடியாகக் கொட்டிக் குவித்து தமிழ்மக்களின் நலனுக்காக தனது அரசாங்கம் பெரும் பணியாற்றுவதாகவும் புகழ்ந்துரைக்கின்றார். இவை எல்லாம் கேட்கும்போது எமது மக்களுக்கு வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருந்திருக்கும்.

### தமிழரை அவமதிக்கும் சந்திரிகாவின் உரை

சாராம்சத்தில் சந்திரிகாவின் உரையானது தமிழ்மக்களின் அறிவுக்கு இழைக்கப்பட்ட ஓர் அவமதிப்பாகவே கருதப்படவேண்டும். வடக்கு வாழ்வியலின் யதார்த்தம் பற்றி எமது மக்கள் நன்கு அறிவார்கள். எமது மக்கள் இந்த நிலத்தில் வாழ்வதால் அங்கு நிகழும் கொடுமையான போர் பற்றியும் அரச ஒடுக்குமுறைகளின் அநீதிகள் பற்றியும் அனுபவ வாயில்களாக நன்கே அறிவார்கள்.

சிங்கள அரச ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் ஆட்சிக் காலம்தான் கொடிதிலும் கொடிது என்பது எமது மக்களுக்கு நன்கு



தெரிந்ததே. இந்தக் காலத்தில் எமது மக்கள் தாங்கமுடியாத துன்பத்தை அனுபவித்தார்கள். சந்திரிகாவின் ஆட்சிக் காலம் இன்னும் 6. ஆண்டுகளுக்கு தொடரப்போகிறது என்பதும் எமது மக்களுக்குத் தெரியும்.

அதாவது இன்னும் ஆறு ஆண்டுகளுக்குப் போரும், சாவும், அழிவும் தொடரப்போகின்றன என்பதையும் எமது மக்கள் நன்கு அறிவார்கள். உண்மையில் இந்த உரை தமிழ் மக்களுக்கு, யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு விடுக்கப்படவில்லை. யாழ்ப்பாண மக்கள் புத்திசாலித் தந்திரமும சாணக்கிய தகைமையும் படைத்தவர்கள். சந்திரிகாவின் உரையில்

## பாரதூரமான விளைவுகள் ஏற்படும்; எச்சரிக்கிறார் அன்ரன் பாலசிங்கம்

பொதிந்து கிடக்கும் அரசியல் நய வஞ்சகத் தன்மையை அவாகள் இனம் கண்டு கொள்வார்கள். இந்த உரையானது சர்வதேச சமூகத்திற்கு - குறிப்பாக உதவி வழங்கும் நாடுகளுக்கு - விடுக்கப்பட்டிருக்கிறது.

சீல நெறிகளைக் கொண்ட சிறப்பான ஆட்சி என்றும் சிறுபான்மையினரது உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் நல்ல அரசு என்றும் போரால் சிதைந்துபோன வடக்கைப் புனரமைப்பதே அரசின் இலட்சியம் என்றும் சந்திரிகா சுய புகழ் பாடுவது உதவி வழங்கும் உலக நாடுகளுக்குக்காகத்தான்.

ஆனால் சந்திரிகா ஆட்சிப் பீடத்தில் உள்ள குறைபாடுகள் பற்றியும் சீர்கேடுகள் பற்றியும் வடக்கில் நிலவும் யதார்த்த நிலைமைகள் பற்றியும் உலக அவதானிகள் நன்கு அறிவார்கள்.

போர் தொடரும் என்றால் வடக்கை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவது சாத்தியமில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

இதன் காரணமாகவே இரண்டு தரப்பினரையும் போர் நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுமாறு உலக சமூகம் வலியுறுத்தி வருகின்றது. உலகத்தின் கோரிக்கைக்கு இணங்க நாம் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் செய்து எமது நல்லெண்ண நோக்கை செயல் வடிவத்தில் காட்டி இருக்கிறோம். ஆனால் ஸ்ரீலங்கா அரசு போரை நிறுத்த மறுத்து வருகிறது. போரைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு சமாதானப் பேச்சுக்களையும் நடத்தலாம் என்று கூறுகிறது.

### அபத்த நாடகம்

பேசிக் கொண்டே போரை நடத்தும் அபத்த நாடகத்தில் நடிக்க நாம் தயாராக இல்லை. நாம் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தைக் கடைப்பிடித்து வருகின்றோம். எமது போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டு தானும் போர் நிறுத்தம் செய்து வடக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்த அரசாங்கம் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும் என்றால் நாம் போர் நிறுத்தத்தை மேலும் நீடிக்கவும் பேச்சுக்களில் கலந்து கொள்ளவும் தயாராக இருப்பதாகவும் அறிவித்திருந்தோம்.

எமது நல்லெண்ண சமாதான முயற்சியை நிராகரித்திருக்கும் சந்திரிகா போரை நிறுத்துவதற்கும் பேச்சுகளில் பங்கு கொள்வதற்கும் விடுதலை புலிகளுக்கு அக்கறை இல்லை என்று கூறிவருகிறார்.

எமது விடுதலை இயக்கத்தைப் பற்றி சந்திரிகாவின் மனதில் விகாரமாகப் புரையோடிக் கிடக்கும் ஆழமான வெறுப்பையும் சந்தேகத்தையுமே இந்தக் கூற்று வெளிப்படுத்துகின்றது. இந்த வெறுப்பும் சந்தேகமும் காரணமாகவே சந்திரிகா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் மததியில் பிளவு விரிந்து செல்கிறது. இரு தரப்பினர் மத்தியில் நிலவும் வரலாற்றுப் பகைமை பற்றியும் சந்தேகங்கள் பற்றியும் நோர்வே அரசுக்கு நன்றாகவே தெரியும். இதன் காரணமாகவே பரஸ்பரம் நம்பிக்கையை வளர்க்கும் நோக்கத்துடன் இரு தரப்பினரும் பரஸ்பரம் நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ளும் யோசனையை நோர்வே அறிவித்திருந்தது.

ஆனால் இந்த யோசனைகள் பற்றி சந்திரிகா அரசு இன்னும் முடிவு எதனையுமே கூறவில்லை.

*கேள்வி:-* கடந்த வருடம் சிங்கள தீவிரவாதிகளதும் தமிழ் மிதவாதிகளதும் எதிர்ப்புக்குக் காரணமாக கைவிடப்பட்ட அரசமைப்பு யோசனைகளை மீண்டும் கொண்டு வரப்போவதாக சந்திரிகா அறிவித்திருக்கிறார். இந்த அரசமைப்பு யோசனைகளின் அடிப்படையில்தான் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறார். விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினையின் அடிப்படைகளை இனம் கண்டு அவை பற்றி பேசுவதற்கு முன்வர வேண்டும் என்றும் கூறுகிறார். இது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

### செத்துப்போன அரசமைப்புத் திட்டம்

*பதில்:-* செயலிழந்து செத்துப்போன சந்திரிகாவின் அரசமைப்புத் திருத்த யோசனைகள் சம்பந்தமாக நாம் ஏற்கனவே எமது கருத்துகளை அழுத்தம் திருத்தமாக விளக்கி இருக்கின்றோம்.

இந்த அரசமைப்பில் ஆழமான குறைபாடுகள் இருக்கின்றன. இவை எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்யப்போவதில்லை. தமிழரது தேசியப் பிரச்சினைகளின் அடிப்படைகளை உள்வாங்கிக் கொள்ளும் போதிய சட்ட வாய்ப்புகள் இந்த அரசமைப்புக் கட்டமைப்பில் இருக்கவில்லை.

தமிழர்களது வரலாற்றுத் தாயகத்தில் அவர்களுக்குரிய நிலையான - மாற்றமுடியாத - உரிமை, தேசிய இனம் என்ற ரீதியில் அவர்களுக்குரிய அரசியல் தகைமை, அவர்களது சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை தமிழரது பிரச்சினைகளின் அடிப்படையாக நாம் கொள்ளலாம். அதுவே அவர்களது அரசியல் அபிலாஷைகளும் ஆகும். எமது மக்களுக்கு எதிரான போரையும் வன்முறையையும் நிறுத்தி சமாதானத்திற்கு ஒத்திசைவான இயல்பு நிலையை ஏற்படுத்திக்கொடுத்தால் - நாம் இந்த அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

*கேள்வி:-* விடுதலைப் புலிகள் இயக்கம் தமது ஒருதலைப்பட்ச போர் நிறுத்த அறிவித்தலை சர்வதேச ஊடகங்களுக்கு வெளியிடுவதற்கு முன்னதாக நோர்வே மத்தியஸ்தர்கள் வாயிலாக ஸ்ரீலங்கா அரசுக்கு அறிவித்திருக்க வேண்டும் - என அரச வட்டாரங்களிலும் கொழும்பில் உள்ள ராஜதந்திர வட்டாரங்களிலும் குறைகாணப்படுகிறது. இது பற்றி உங்களது கருத்து என்ன?

### யுத்தநிறுத்தம் குறித்து தூதருக்குத் தெரிவித்தோம்

*பதில்:-* எமது விடுதலை இயக்கம் ஒருதலைப்பட்சமாக ஒரு மாத காலத்திற்கு போர் நிறுத்தம் செய்ய இருப்பதாக முதலில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அவர்களுக்கு நான் அறிவித்திருந்தேன். எமது அதிகார பூர்வமான அறிக்கையையும் 'தொலைநகல்' மூலமாக அவருக்கு அனுப்பி வைத்து ஸ்ரீலங்கா அரசுக்கு அறிவிக்குமாறு கூறிய பின்னரே இந்த விடயத்தை சர்வதேச ஊடக உலகத்திற்கு அறிவித்தேன்.

இந்த நேரத்தில் ஸ்ரீலங்கா ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும்,' முக்கிய அமைச்சர்களும் கொழும்பில் இருக்கவில்லை. அவர்கள் எல்லோரும் வெளிநாடுகளில் விடுமுறையைக் கழித்துக் கொண்டார்கள். அதனால்தான் அந்தவேளையில் அவர்களைத் தொடர்புகொள்ள முடியவில்லை என்று எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் எனக்குத் தெரிவித்தார்.

எனவே நாம் அரசுக்கு அறிவிக்கவில்லை என்று எம்மீது எவரும் குறைசொல்ல முடியாது.

*கேள்வி:-* புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை வரவேற்றும் அரசும் பதிலுக்கு போர் நிறுத்தம் செய்து புலிகளுடன் பேசவேண்டும் என வலி

(3ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

# பொங்கல் வேண்டுதல்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்றனர் நம் முன்னோர்கள். அன்றைய காலத்தில்— கால நிலையில்—அது அர்த்தமுள்ள, நூறு விதம் நடைமுறையில் உண்மையான ஒன்றாகவே விளங்கியது.

ஆனால் இக் காலத்தில் — மாறிவிட்ட கால நிலையில்— தை பிறந்தால் வழி பிறக்கும் என்று கூறுவது பொருத்தமானதா என்ற கேள்வி எழுகிறது.

புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களை மாரிகாலம் என்று வகுக்கக்கூடிய வளிமண்டலச் சூழல் இப்போது இல்லை. மழை விழ்ச்சி முந்திய காலங்களை விடச் சராசரி 25 சத வீதமாகக் குறைந்துவிட்டது. அது மட்டுமன்றி மழையும் முந்தியும் பிந்தியும் பெய்கிறது.

அதன் காரணமாக, வயலிலேவிளைந்த செந்நெல்மணிகளைப் புத்தரிசியாக்கி, பொங்கலிட முடிவதில்லை.

மழை பிந்தி, விதைப்புப் பிந்துவதால், தை பிறந்த பின்னரே அறுவடையே நடைபெறுகிறது. அதனால் உழவர் பெருமக்கள் கூடத் தமது வயலின் புத்தரிசி கொண்டு தைப்பொங்கல் தினத்தன்று பொங்க முடிவதில்லை.

கழிந்து போன ஆண்டிலோ நிலைமை மேலும் மோசம். வனப்பும் வளமும் செழிப்பும் இன்றி மூளியாகிவிட்ட தென்மராட்சியில் மட்டுமன்றி, குடாநாட்டிலேயே நெற்செய்கை 'பொய்த்து' போயிற்று அதனால் உழவர்களும் கப்பலில் வந்த அரிசி கொண்டுதான் இன்று பொங்கலிட நேர்ந்துள்ளது.

ஆகையால் —

நெல் விளைந்ததால் உழவன் விட்டுப் பொருள் வளத்துக்கம் அதனுாடு ஏனைய துறைகளுக்குமான வழி பிறந்தது எனக் கூறும் நிலை இன்றில்லை.

எனினும் விவசாயத்துக்கு மட்டுமன்றி எமது உடல் நலத்துக்கும், வாழ்வுக்கும் மற்றும் எமது சுற்றுப்புறச் சூழல் பசுமை காண்பதற்கும் உறுதுணையாக விளங்கும் உதயனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் எம்மக்கள் தைப் பொங்கல் திருநாளை — பண்பாட்டுப் பெருநாளை — தமிழர் தேசியப் பண்டிகையை — தொடர்ந்து கொண்டாடுகின்றனர்; கொண்டாட வேண்டும்.

அதே போன்று தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை வாசகமும் மக்கள் மனங்களில் இருந்து இலகுவில் நீங்கிவிடாது.

அதனாலேயே, சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கப் போவதாகக் கூறிய அரசாங்கம், அதிலிருந்து நழுவும் தன்மையுடன் போர் நிறுத்தம் செய்யப் பின்னடித்த போதிலும்—

தை பிறந்த பின்னராவது அது தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள்; நம்புகிறார்கள்.

போரினால் பெருமளவில் பாதிக்கப்படுவது தமிழ் மக்களும் அவர் தம் தாயகமுமே அதனால் ஏனையோரைவிட அமைதியையும் சமாதானத்தையும் அவர்களே அதிகமாக அவாவுகின்றனர்.

ஆனால் போரினால் தமிழர்களும் அவர்தம் பிரதேசங்களும் அழிவுறுவதைச் சற்றும் உணராதவர்களாக, அவற்றை அனுபவிக்காத காரணத்தால் போரை நிறுத்த மனங்கொள்கிறார்கள் இல்லை. போரை நிறுத்தி அமைதியான சூழ்நிலையில் பேசுவதனால் உண்டாகக்கூடிய நல்விளைவுகளைச் சிந்தித்து ஆக்கபூர்வமாகச் செயற்படட்டும். அதுவே பொங்கல் நாள் வேண்டுதலாகும்.

# தற்போதைய..

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யுறுத்தியும் 10 அரசியல் கட்சிகள் கூட்டாகச் சேர்ந்து பரப்புரை செய்து வருகின்றன. இதேவேளை தமிழ் மக்கள் மத்தியிலும் உங்களது சமாதான முயற்சிக்கு பரந்தளவு வரவேற்பு பெருகிவருகிறது. இந்தத் திருப்பங்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்: இது மிகவும் வரவேற்கத்தக்கநல்லதொருதிருப்பம் என்றே சொல்லவேண்டும் சமாதானம் குறித்துசமாதான வழியிலான அரசியல் தீர்வு குறித்தும் கருத்தொற்றுமைஉருவாகி வருவதன் அறிகுறியாகவும் இதனைப் பார்க்கலாம்.

பொதுமக்களின்விடிவுக்காக நாம்முன்னெடுக்கும் போராட்டத்துக்கு ஒன்றுபட்ட தமிழரது குரல் ஓங்கி ஒலிப்பதைக் காண எமக்குப்பெருமகிழ்ச்சியாக இருக்கிறது.

### எழுச்சி நிகழ்வு புதிய திருப்பம

சுயநிர்ணய உரிமைதான் தமிழர்களின் ஆழமான அபிலாஷை என்பதை உணர்த்தும் வகையில் யாழ்ப்பாண மக்கள் எழுச்சிக்கோலம் கொண்டு குரல் எழுப்ப ஆரம்பித்திருப்பதும் ஒரு வியக்கத்தக்க புதிய திருப்பம் என்றே சொல்ல வேண்டும்

இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள இந்தப் பிரதேசத்தில அரசியல் அழுத்தங்கள எதுவும் இன்றித் துணிச்சலான ஒரு வெகுஜன எழுச்சி பரிணமித்து வருவது வரவேற்கத்தக்கது. தமிழரது அரசியல வரலாற்றில் இது ஓர் ஆக்கபூர்வமான திருப்புமுனையாகும்.

கேள்வி:- விடுதலைப் புலிகள் தலைமையில் நடைபெறும் ஆயுதப் போராட்டதை பயங்கரவாதமாகச் சித்தரித்து ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உலகெங்கும் பிரசாரம் செய்து வருகிறார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளையும் தடை செய்யுமாறுபிரித்தானியஅரசு மீது அழுத்தம் போட்டு வருகிறது. பிரித்தானிய அரசும் கதிர்காமரின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து வருவதாகவும் சொல்லி இருக்கிறது. இந்தப் பிரச்சினை பற்றி நீங்கள் எவ்விதம் நோக்குகின்றீர்கள்?

பதில்:- தமிழரது தேச சுதந்திரப் போராட்டத்துக்கு இழுக்கு ஏற்படுத்தித் தனது சிங்கள எஜமானர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் கதிர்மாமர் தனது தொழிலை செவ்வனே செய்கின்றார் என்பது எமக்குத் தெரியும். தமிழரதுவிடுதலைப்போராட்டத்தைப பயங்கரவாதம் என்று பொய்சொல்லி அமெரிக்கர்களை நம்பவைப்பதில் அவர் வெற்றியும் கண்டிருக்கின்றார்.

இதனால் அமெரிக்கா ஒரு தவறான முடிவை எடுத்தது.

இந்த முடிவு தமிழர்களுக்கு எதிரான போரைத் தீவிரப் படுத்த சிங்கள அரசுக்கு ஊக்கமளித்தது. ஆனால் இந்தத் தவறான முடிவால் அமெரிக்கா சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஆக்கபூர்வமாகப் பங்களிக்க முடியவில்லை.

பிரித்தானியா ஒரு முக்கியமான வல்லரசு. இனப்பிரச்சினையில் இரண்டு தரப்பினரையும் சமாதானப் பாதையில் இட்டுச் செல்லும் நோர்வேயின் முயற்சிக்குப் பிரித்தானிய அரசு பக்கத் துணையாக நின்று பங்களிப்புச் செய்கிறது.

பிரித்தானியாவுக்கு இன்னொரு வரலாற்றுக் கடப்பாடும் உண்டு. காலனித்துவ யுகத்தில் பிரித்தானியரின் தலையீடுகள் காரணமாகவே இரு தேசங்களின் மத்தியில் முரண்பாடு முளைத்தது.

### பிரிட்டனுக்கு விளக்கினேன்

ஆகவே, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் கடப்பாடு பிரித்தானியாவுக்கு உண்டு. தமிழர்களது நியாயமான அபிலாஷைகளை நசுக்கிவரும் ஓர் இனவாத அரசின் கரங்களைப் பலப்படுத்துவதே கதிர்காமரின் நோக்கம், அவரது கோரிக்கைக்கு இசைந்து விடுதலைப் புலிகளைத் தடை செய்வதால் எழக்கூடிய எதிர்மறை விளைவுகள் பற்றி நான் பிரித்தானிய அரசின் உயர்மட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்து விளக்கி இருககின்றேன்.

முதலாவதாக எமக்கு எதிராகத் தடை கொண்டு வரப்பட்டால் தற்போதைய சமாதான முயற்சிகள் பாரதூரமான முறையில் பாதிக்கப்படும். இந்த நடவடிக்கையால் பிரித்தானியாவின் நடுநிலை அந்தஸ்து அகன்று போய்விடும். அதனால் ஆங்கில அரசு தமிழர்களின் இனப்பிரச்சினையில் ஆக்கபூர்வமான பங்களிப்பு எதனையும் செய்ய முடியாது.

அடுத்ததாகத் தமிழரது நலன்களைப் பேணி அவர்களது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் மாபெரும் அரசியல் இராணுவ சக்தியாகத் திகழும் விடுதலைப் புலிகளைத் தடை செய்தால் ஒடுக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் நலன்கள்தான் பாதிக்கப்படும்.

மூன்றாவதாக ஈழத் தமிழரது இலட்சியப் போராட்டத்துக்கு 10 கோடி உலகத் தமிழர்கள் தார்மீக ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் ஆதரவு வழங்கி வருகின்றார்கள். புலிகளுக்கு எதிராக தடை கொண்டு வரப்பட்டால் பிரத்தானிய அரசு உலகத் தமிழர்களின் வெறுப்பைத்தான் சம்பாதிக்க முடியும்.

நான்காவதாக மிக முக்கியமான ஒரு விடயம் நாம் சர்வதேச பயங்கரவாதத்தில் ஈடுபடும் ஓர் இயக்கம் அல்ல.

இந்தக் கற்பிதம் கதிர்காமரது விகாரமான மனக்குகைக்குள்தான் குடியிருக்கிறது. மூன்றாவது உலகத்தில் நிகழ்ந்த – நிகழ்ந்து வரும் ஆயுதப் போராட்ட வடிவங்கள் பற்றியும் அவற்றின் வரலாறு பற்றியும் ஆழமான வரலாற்று அனுபவத்தை உடைய ஆங்கில அரசு அவசரப்பட்டு தவறான முடிவுகளை எடுக்கமாட்டாது என்று நாம் நம்புகின்றோம்.

(ஐ–6)

## நாளை

தை 02

திங்கட்கிழமை

திதி: ஷஷ்டி

பிற்பகல் 2.19 வரை.

நட்சத்திரம்: உத்தரம்

முற்பகல் 8.33 வரை.

பட்டிப் பொங்கல் திருநாள்

சுபநேரம்: 12.34 — 2.04

ராகுகாலம் 08.04—9.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)


ரசிக உள்ளங்கள்
வியாபாரிகள்
அனைவருக்கும்

எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

விற்பனையாகிறது
★ என்னவளே
★ பிரியாத வரம் வேண்டும்
(பாட்டுப்புத்தகம்)

விநியோகஸ்தர்:
S. K. பிரபாகரன்
ஆனைக்கோட்டை.

[82947]



யாழ் பல்கலைக்கழக கலைப்பீடமாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் காணாமல் போனோரின்
குடும்பங்களினது சிறார்களின் துயர் துடைப்புக்காக
யாழ், முன்னணி இசைக்கலைஞர்களுடன்
யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்
இணைந்து வழங்கும்

"கலைக்குயில் கானங்கள்"

இசை விருந்து

இடம்: அச்சுவேலி மகா வித்தியாலயம்
காலம்: 14-01-2001 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2-30 மணி (புதிய நேரம்)
நுழைவுச் சீட்டு மண்டப வாயிலில்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
[82967]


## மகரஜோதி பூர்த்தி விழா

ஐயப்பன் அடியார்களே!

இன்று (14-1-2001) ஞாயிற்றுக்கிழமை மாலை



2 மணி தொடக்கம் கோண்டாவில் சிவபூதராயர் கோயிலில் அமைந்துள்ள ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில இருந்து ஐயனின் ஆபரணப் பெட்டி கோண்டாவில் கோகுல வீதியில் அமைந்துள்ள சுதன்சாமி இல்லம் வரை விசேட மங்கள வாத்தியம் முழங்க வலம் வரும் கரகாட்டம், புலி, சிங்கம், குதிரை ஆட்டங்களும் ஐயப்ப பக்த சாமிமாரும் பேட்டை துள்ளி ஆட்டமும் ஐயப்ப கோஷமும் பஜனையும் நடைபெறும். தொடர்ந்து 18 படிபூசை என்பன நடைபெறும். இந்த நிகழ்விலே அனைவரும் வந்து தரிசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சுபம்,

ஐயப்ப பக்தன்,

கோண்டாவில். கி. ஹரிஹரசுத சர்மா

(82953)

## கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் மேற்கு
ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில்
நிர்வாக சபைச் செயலாளர்
திரு. த. சிவராசா
அவர்களின் தாயார்

**திருமதி இரத்தினம்மா தம்பித்துரை**

அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- நிர்வாக சபை உறுப்பினர்கள்

(82965)

## நன்றி நவிலல்

**திருமதி வீரகத்தி செல்வநாயகம்**

எமது குடும்ப விளக்கு திருமதி வீரகத்தி செல்வநாயகம் அவர்கள் 10–01—2001 அன்று சிவபதம் அடைந்தார்.

எமது அன்னையின் மறைவால் நாம் துயருற்றிருந்த வேளையில் துயர் பகிர்ந்ததுடன் இறுதிக்கிரியை நிகழ்வுகளுக்கான உதவிகளைப் புரிந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும், கண்ணீர்த் துளிகளை பிரசுரமாக்கி வெளியிட்ட யாழ் மாவட்ட பாரவூர்திஉரிமையாளர், சாரதிகள் கூட்டுறவுச் சங்கத்தினருக்கும் எமது நன்றிப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பிள்ளைகள்:

வீ. குமாரசாமியும்

(தலைவர், யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் சாரதிகள் கூட்டுறவுச் சங்கம்),

சகோதரர்களும்

(E. V K. லொறி உரிமையாளர்கள்).

நிரந்தர முகவரி: சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

தற்காலிக முகவரி: சம்பந்தர் கடையடி, கரவெட்டி,

(82932)

# இந்த வார இராசி பலன்

## 14-01-2001 - 20-01-2001

## மகாதேவா ஜோதிடம்

தைப்பொங்கல் திருநாள் தொட்டு அமைதி பொங்க, யுத்தம் தணிய எம் நற்சிந்தனையை ஆண்டவனை நோக்கி அடிபணிந்து அன்புகூருவோம்.

| | | | |
|---|---|---|---|
| | சனி | வியா | ரா |
| வெ | இராசிச் சக்கரம் | | |
| சூ▼ புத | | | சந் |
| கே | | செவ் | |

**மாற்றம்:-**

***14 - 01 - 2000 இல் பூரம் நட்சத்திரத்தில், சிங்கம் இராசியில் சந்திரன் நிற்கும்.***

அரசியல் பேச்சுவார்த்தைகள் தொடரும். சமாதானமும் போரும் என்ற நிலை மாறி சாமாதானம் மலரவேண்டும்; அமைதி நிலவவேண்டும் என மக்கள் இறைவனைப் பிரார்த்திப்பார்கள். அரசியல்வாதிகளிடையே அபிப்பிராய பேதங்கள் தொடரும். இந்தியா கூடிய கரிசனை கொள்ளும். தென் இந்திய அரசியல்வாதிகள் குரல் எழுப்புவார்கள். வடக்கே வன்முறைகள், தீவிரவாதிகளால் (இந்தியாவில்) தொடரும். மேற்கு உலகம் கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆலோசனை அழுத்தங்கள் கொடுக்கும் எனக்கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

எதையும் இவ்வுலகில் போட்டி போட்டுத்தான் பெறவேண்டி இருக்கின்றது. நல்லவற்றிக்காகப் போட்டி போடுவதில் என்ன தப்பு இருக்கின்றது? எனவே தொழில் ஸ்தானத்தில் போட்டி ஏற்பட்டபடி இருக்கும். சமாளியுங்கள். காணி பூமியால் வீண்பழி கேட்பீர்கள். ஆடை, ஆபரணம் வரவும் சுபமங்கள காரிய அனுகூலமும் ஏற்படும். பெற்றோரை அல்லது அவர்கள் வழி உறவினர்களைப் பகைக்க நேரிடலாம். எதிர்ப்பாலார் நல்லதைச் சொல்லமாட்டார்கள். மூச்சுநோ, தோல்வருத்தம், கைகால் மூட்டுவருத்தம் என்பன ஏற்பட இடமுண்டு. மருந்துத் துறை, பாதுகாப்புத் துறை, பல்பொருள் வியாபாரம், வாகனப் பொருள் துறை, உணவுத் துறை, பண்ணைத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.

### இடபம்

கோயில் கட்டுவதற்கு மக்கள் பணத்தைத் தருவது— தமது பாவம் போகவும் அதனால் தமக்குப் புண்ணியம் நற்கதி வரும் என்ற நம்பிக்கையினாலாகும். அதை உதாசீனஞ் செய்வதும் — தமது சுயநலத்திற்குப் பாவிப்பதுவும் பாவத்தைத் தம்மீது சேர்ப்பதற்குச் சமனாகும். வீடு, வாகன சுகம் ஏற்படும். அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படச் சந்தர்ப்பம் வரும். வெளிநாட்டுச் செய்திகள் வரும். சலவருத்தம், தொண்டை வருத்தம் இருமித் தாக்கங்கள் வரும். சட்டத்துறை, ஆசிரியத் துறை, காவற்றுறை, இரும்புத் துறை, மருந்துத் துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும், நன்மைகளும் அதிகரிக்க இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், சனி.

### மிதுனம்

கவர்ச்சி, காமம் என்பனை இல்லையெனில் எவருக்கும் இவ்வுலகப் பந்தபாசம் இருக்காது. எனவே அது முக்கியம். ஆனால் அதைப் பக்குவமாகப் பாவிப்பதிலிருந்தே ஒருவரின் பாவ புண்ணியம், உயர்வு தாழ்வு அடங்கியுள்ளது. எனவே நிதானமாக உங்கள் தொழில் ஸ்தானத்தில் செயற்பட்டபடி இருங்கள். குறைவு, நிறைவு மாறி மாறி நடக்க இடமுண்டு, மலச்சிக்கல், சலிப்பு, களைப்பு, முதுகுவலி, தலைவலி போன்ற தொல்லைகள் வரலாம். பெரியவர்களின் உதவிகள் ஆறுதலைத் தரும். இடமாற்றங்கள் நன்மைகள் தர இடமுண்டு. களவு சிலருக்குப் போகலாம். கவனமாக இருக்கவும். தோட்டத்துறை, செய்தித்துறை, வங்கித்துறை, கோவில் துறை போன்ற துறைகளில் தொடர்புடையவர்களுக்கு மாற்றங்களும், நன்மைகளும் ஏற்பட இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், சனி.

### கடகம்

என்னதான் இருந்தாலும் சொந்த வீட்டில் இருக்குமாப்போல் வருமா? யுத்தத்தால் பட்ட வேதனைபோதும் என நினைக்கிறீர்களா? உண்மைதான். வடக்கு— கிழக்கு மக்கள் தங்கள் உரிமைகளைக் கேட்கக்கூட முடியாதா? இது எங்கள் பூமி— எமக்குச் சகல உரிமைகளும் இங்கு வாழ இருக்கின்றது என நீங்கள் எண்ணுவதில் நியாயம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் வரவுக்கள் புதிய மாற்றங்கள் வர இடமுண்டு. கண்டபடி குறை சொல்லாதீர்கள். ஊருடன் பகைத்தால் வேருடன் அல்லவா கெடும். தூரதேசச் செய்திகள் நன்மைகள். மகிழ்ச்சிகள் தரும். அரசியல்துறை, செய்தித்துறை, எழுத்துத் துறை, கணக்குத் துறை போன்றதுறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், சனு.

### சிங்கம்

வாழ்க்கை என்பது நன்மை தீமை கலந்த ஒருவழியாகும். சமாதானமும் — சண்டையும் மாறி மாறி நடக்கும் அதற்காக சமாதானத்திற்காக சண்டை செய்கின்றோம் என்பது மற்றவர்களை ஏமாற்றச் சொல்லும் சொல்லாகும். இருவரும் சண்டையை விட்டால் தானகச் சமாதானம் வரும்தானே!. எனவே தொழில் ஸ்தானத்தில் உன்னதை — உண்மையை நீதியைச் சொல்லுவீர்கள். அதனால் கலகம் வரலாம். உங்களைத் தூக்கி எறிந்து சிலர் பேசலாம். அதற்காகத் தவறு செய்தவர்களை கண்டபடி விட்டுக்கொடுக்க முடியாது. நீங்கள் சொன்னது, சொல்லுவது உண்மையாகும். அதற்காகப் போராடுங்கள். வெற்றி உங்களுக்கே கிடைக்கும். நெஞ்சுவருத்தம், கண், தொண்டை வருத்தம், கால் விறைப்பு, நாரிநோ வரும் மாறும் கடல்துறை, மருந்துத்துறை, பிரயாணத் துறை, தரகுத்துறை, நகைத் துறை போன்றவர்கள் அதிக ஆதாயம் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:— வியாழன், சனி.

### கன்னி

உங்கள் மீது குற்றம் சுமத்துபவர்கள் தொடர்ந்து சுமத்தியபடியே இருப்பார்கள். அதற்காக நீங்கள் செய்யும் நற்காரியங்களை இடைநிறுத்தக் கூடாது. எனவே தொழில் ஸ்தானத்தில் நேர்மையையும், திறமையும் நடக்குந்தான் செய்யும். உங்கள் சமயோசிதத்தால் நீங்கள் முன்னேறி நன்மை பெற்றபடி இருப்பீர்கள். அரச உதவிகள் கிடைக்கும். வீடுமனையில் மாற்றம், சகோதரர் உதவிகள், சோதிடரை நாடும்நிலை, உறவினர் கொண்டாட்டம் தந்தை அல்லது நண்பர்களின் திடீர் உதவிகளால் இலாபங்கள் வரும். சனித்தொல்லை, கிருமித்தாக்கம், மூலவருத்தம், உஷ்ணபீடைகள் என்பன வர இடமுண்டு.பொருள் இழப்பு, செலவுகள் வரலாம். நிதானமாக இருக்கவும். சட்டத்துறை, காவல்துறை, வாசனைப் பொருள்கள் விற்பனைத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், சனி.

### துலாம்

புதிய பொறுப்புக்கள், இடமாற்றங்கள் என்பன ஏற்படலாம். உங்களலால் எதையும் சமாளிக்க முடியும். பல ஆறுகள் ஓடி ஒரு கடலில் சங்கமிப்பது போன்ற நிலை, பொறுப்புக்கள், பல வேலைகளை நீங்களே ஒருவராக நின்று சமாளிப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் கூட இருப்பவர்கள் தொல்லை கொடுப்பார்கள். நீங்களும் நண்பர்களுடன் ஏன் சீறிச் சினக்கிறீர்கள்? தாய்வழி உதவி கிடைக்காது. எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமை ஏற்பட இடமுண்டு. அரச உதவிகள் கிடைக்கும். குடல்வருத்தம், வயிற்றுவருத்தம், அடிக்கடி ஆத்திரமும், போராட்ட உணர்வும் ஏற்பட இடமுண்டு. வியாபாரத் துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை, சட்டத்துறை, மின்சாரத் துறை, விவசாயம் அல்லது தோட்டத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், சனி.

### விருச்சிகம்

ஆண்டவன் அருள்சித்தைச் சிலர் கிள்ளி எடுத்துள்ளார்கள். ஆண்டவனோ எப்பொழுதும் அள்ளித்தரக் கூடிய நிலையில் உள்ளார். அவன்தாழ்பணிந்து உண்மை, சத்தியத்தை காப்பாற்ற உங்களுக்குத் தகுதி உண்டா? நீங்கள் தயாரா? உங்கள் அன்புஎன்பாதத்தில் தாழுமா என்றுதான் அவர் பார்க்கின்றார். எனவே ஆண்டவன், பக்தன், முதலாளி, தொழிலாளி போன்று செயற்பட்டால் பலருக்கும் நன்மை கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் விட்டுக் கொடுத்து நடப்பதனால் பல நன்மைகள் ஏற்படும். வருமானங்கள் அதிகரிக்கும். பக்கத்தில் இருப்பவர்களுடன் நிதானமாக நடவுங்கள். அயலவர்கள் கோள் சொல்லிப் பலவீனப்படுத்துவார்கள். இடமாற்றங்களை நிதானமாகச் செயற்படுத்துக்கள் சிரசு வருத்தம், நாரி வருத்தம், நரம்பு வருத்தம், நெஞ்சுநோ, நாரிவலி என்பன வரும். செய்தித்துறை, மருந்துத்துறை, தொழில்நுட்பத்துறை, ரிவி, கொம்பியூட்டர் துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- மத்தியானம் 12·30 1.30 வியாழன், சனி.

### தனுசு

உண்மையாக நடப்பவர்கள் பல இழப்புக்களைச் சந்திக்கிறார்கள். ஆயினும் அவர்கள் தற்காலிக கஷ்டங்கள் அடைந்தாலும் நன்மைகளே அவர்களுக்கு நடக்கும் தொழில் ஸ்தானத்தில் நன்மை திமை மாறி மாறி நடக்கும். புதியதிட்டங்களால் நன்மைகள், வருமானப் பெருக்கம் படிப்படியாக ஏற்பட வழிபிறக்கும், கொடுக்கல் வாங்கலில் அவதானமாக இருக்கவும். நஞ்சுத்தன்மை உடலில் கூடலாம். அவதானமாக இருக்கவும். நம்பிக்கைக்குரியவர்கள் கருத்து வேற்றுமைப்படலாம். இடுப்பு வலி, வயிற்றுநோ, கைகால்நோ, சல வருத்தம் என்பன வரலாம். வாகனத் துறை, கொம்பியூட்டர் துறை, வியாபாரத்துறை, செய்தித்துறை குருத்துறை போன்றவர்களுக்கு மாற்றங்களும், இலாபங்களும் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்டநாள்;—மத்தியான நேரங்கள் 12.45-1 45 வரை.

### மகரம்

நம்பிக்கையுடன் சோதிடம் கேட்டால் நிச்சயம் பல உண்மைகள் வெளிவரும். நன்மையை அடைவீர்கள். சோதிடம் பசிபிக் சமுத்திரத்தை விடப் பெரியது. அதன் கரையிலேயே நாம் நிற்கின்றோம். எனவே நீங்கள் நம்பிக்கையுடன் தொழில் ஸ்தானத்தில் செயற்படுங்கள், இலாபங்கள் அதிகரிக்கும். இடமாற்றங்கள் சகஜமாகும். எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்க வேண்டும். வீட்டில் கலகம் வரலாம். இடமாற்றங்களால் இழப்புக்கள் வர இடமுண்டு மனக்குழப்பம். நரம்புப்பிடிப்பு, வயிற்றில் குழப்பம், காயங்கள் வர இடமுண்டு. விவசாயத் துறை, புடைவைத்துறை, ஆபரணத்துறை சட்டத் துறை, சமயத்துறை, வியாபாரத்துறை, போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:— வியாழன், சனி.

### கும்பம்

உலகில் எல்லோருடனும் யோசித்துத்தான் கதைக்க வேண்டுமாயின் எவருடனும் மனம் விட்டுக்கதைக்கவோ, அபிப்பிராயங்கள் கேட்கவோ முடியாது. தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் அதிகரிக்கும். இடமாற்றமொன்றிற்கு யோசனைகள் ஏற்பட இடமுண்டு. தொழில் ஸ்தானத்தில் இலாபங்கள் அதிகரிக்கும். மேலதிகாரிகள், பெரியவர்கள் உதவிகள் செய்வார்கள். கைகால் வீக்கம். நோல்வருத்தம். நாரிப் பிடிப்பு, நரம்புவருத்தங்கள் என்பனவர இடமுண்டு. போக்குவரத்துத்துறை, நகைத்துறை, கடல்துறை, எண்ணெய்த்துறை போன்ற துறைகள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:— விழாழன், சனி.

### மீனம்

வீட்டில் வாடகைக்குக் குடியிருப்பவர்கள் - வீட்டையே அபகரிக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டால் என்ன செய்வது? விட்டுக்காரர் சும்மா இருக்க முடியுமா? தொழில் ஸ்தானத்தில் இதேபோன்ற செயற்பாடுள்ளவர்கள் இருக்கச் செய்வார்கள். அவர்களால் நல்லவர்களுக்குப் பல கஷ்டங்கள் மாறி மாறிக் கொடுப்பதை உணர்வீர்கள். காணி பூமியால்பலவித கஷ்டங்கள் புதிய பொறுப்புக்கள் ஏற்படச் செய்யும். செலவுகள் அதிகரிக்கும். வைத்தியத்திற்காக அலைவீர்கள். குடல் வருத்தம், மூட்டுவருத்தம் சளித்தொல்லைவரலாம். மறதி அடிக்கடிவரும். குருத்துறை, கடல்துறை, மருந்துத் துறைபோன்றன துறைகளால் நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:— வியாழன், சனி.


**திருமறைக் கலாமன்றம்**

நடத்தும்

**பொங்கல் கலைப் பொழுது**

நாள்: இன்று (14-01-2001) ஞாயிறு
இடம்: மன்ற அரங்கு
காலை: 6.00 மணி பொங்கலும் வழிபாடும்
மாலை: 5.30 மணி சிறப்பு நிகழ்வு

பிரதம விருந்தினர்:
கலாநிதி N. சண்முகலிங்கன்
[தலைவர், சமூகவியல் அரசறிவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

**கலை நிகழ்ச்சிகள்**

() நடனம் () குழுப்பாடல்
() காவடி () 'கனவில் ஒருநிஜம்'
(ஓராள் அரங்கு)

சிறப்பு நிகழ்வாக
**'சோழன் மகன்'**
(நாட்டுக்கூத்து)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொதுச்செயலாளர்
திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி.
யாழ்ப்பாணம். (சி/14826)

# சங்காபிஷேகமும் மகரஜோதிப் பெருவிழாவும்

வடலியடைப்பு பாரத்தனை ஸ்ரீபுஷ்பகலா சமேத ஹரி ஹர புத்திரர் ஆலய நவவோத்திர சத 109 கலச சங்காபிஷேகமும் மகரஜோதி விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளன. இன்றைய தினம் காலை 10 மணிக்கு வடலியடைப்பு புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து 108 பாற்செம்புகள் அடியார்களால் எடுத்துவரப்பட்டு ஐயனார் ஆலயத்தில் நவோத்திர சத 109 கலச சங்கரபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து சுமங்கலிப் பெண்கள் தீபபூசை பதினெட்டுப்படி பாடல் படிக்கப்பட்டு வசந்த மண்டபப் பூஜை நடைபெறும். அதனை அடுத்து மங்கள வாத்தியங்கள் சகிதம் வீதி உலா நடைபெறும். (ஐ-135)


# நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ் ஸ்தாபனத்தார்

ஆகிய நாங்கள் எமது அன்பர்கள், ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

**எமது பொங்கல் வாழ்த்துக்களைத்**

தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களுடைய 50 வருட சேவை பூர்த்தியாவதை முன்னிட்டு இலவச சீட்டிழுப்பொன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம், ஒரேநாளில் ரூ. 500 க்கு மேற்பட்ட கொள்வனவுகளைச் செய்யும் வாடிக்கையாளர்கள் இச்சீட்டிழுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

சீட்டிழுப்பு முடிவு: திகதி 31-01-2001

மின்சார உபகரணங்கள், எஸ்லோன் பைப்புகள், பைப் இணைப்புகள் என்பனவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ்

141, 143, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

(82804)


# மகிழ்ச்சி பொங்குவதற்கு உகந்த சூழல் உருவாகட்டும்!

## அமைச்சர் டக்ளஸ் பொங்கல் செய்தி

தைப் பொங்கலை ஒட்டி ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள செய்தி வருமாறு:-

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது எமது மக்களின் பட்டறிவு வாசகம். தைமாதம் முதல் நாள் அறுவடைக்கு உதவிய அருணனுக்கு நன்றி தெரிவிக்கும் நன்னாள். தைப்பொங்கல் திருநாள் தமிழருக்கு ஒரு பெருநாள். குடும்ப உறவுகள் அனைத்தும் ஒருங்கே கூடிக்குதூகலிக்கும் இந்த நன்னாளில் மனமகிழ்ச்சி பொங்கட்டும். அகதிகள் முகாம்களில் தொடரும் அவல வாழ்வுகள் அகல வேண்டுமென்னும் ஆர்வம் பொங்கட்டும். அராஜகங்கள் இம்மண்ணில் நீங்கி ஆனந்தம் பொங்கட்டும். அறியாமை இருள் அகலட்டும். உவகை பொங்கட்டும் உணர்ச்சிகளின் உந்துதல்களுக்குப் பதிலாக நிதானமும் விவேகமும் இந் நன்னாளில் மலரட்டும்.

உழவர் பெருமக்களின் கைகளிலுள்ள கலப்பைக்குப் பெருமை சேர்த்து வாழ்ந்த எமது மக்கள் உழுதுண்டு வாழ்வதையே பெருமையாகக் கொண்டவர்கள் என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

தைப்பொங்கல் திருநாள் என்பது கழனிகளில் உழுது பயன் விளைவிக்கும் உழவர்களான மக்கள் அறுவடைக்கு உதவிய அருணனுக்கு நன்றி தெரிவிக்கும் செய்தியை உள்ளடக்கமாகக் கொண்டது. தைமாதத்தின் முதலாம் நாளில் கொண்டாடப்படும் இந்த நிகழ்ச்சியின் மூலமாக ஆண்டு முழுவதும் உவகை பொங்கும் என்பது எமது மக்களின் நம்பிக்கை. இந்த நம்பிக்கை நிலைபெற அமைதி தொடர்ந்தும் நிலவவேண்டும் என்பது வெளிப்படையானது. பகைமை உணர்வுகளும், பழி வாங்கும் மனப்பாங்குகளும், முரண்பட்டு மோதும் சூழ்நிலைகளும் மறைந்து போய் புதியதொரு வாழ்க்கைக்குத் தேவையான நம்பிக்கைகள் வேரூன்ற இந்த ஆண்டு வழி காட்டட்டும். புதுப்பானையில் பொங்கும் பால் போல எமது மக்களின் மனங்களில் மகிழ்ச்சி பொங்குவதற்கு உகந்த சூழ்நிலைகள் உருவாகட்டும். (ஐ)

# மாணவர் விவரம் பதிவு

யாழ்ப்பாணம், ஜன. 14

இடம்பெயர்வுக்கு முன்னர் சோரன்பற்று கணேசா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற சகல மாணவர்களையும் நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தமது பதிவுகளை யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் மேற்கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் கே. உதயகுமாரன் கேட்டுள்ளார்.

இலவச பாட நூல், சீருடை வழங்குவதற்காகவே இந்தப் பதிவு மேற்கொள்ளப் படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-3)


உ

# கணபதீஸ்வர குருகுலம்

நடைபெறுகின்ற வகுப்புகள்

**வேதம்:**
காலை 5-30 — 6-30
பி. ப. 1-00 — 2-00

**ஆகமம்:**
பி. ப. 2-00 — 3-00

**சமஸ்கிருதம்:**
சனி, ஞாயிறு
பி. ப. 3-00 — 5-00

தொடர்பு:
ப. இராஜகோபால சர்மா
93, கோயில் வீதி,
நல்லூர்.

(82880)


# பயிற்சிநெறி பூர்த்தி

யாழ். மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்பட்ட பாலர் முன்பள்ளி கல்விப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து 54 பேர் வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறி கடந்த நவம்பர் மாதம் ஆரம்பமாகிக் கடந்த 6 ஆம் திகதி பூர்த்தியானது.

(ஐ-3)

# வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.

# கேள்வி அறிவித்தல் - 2001

## உரும்பிராய் மத்திய சந்தைக் கட்டடத்தில் அமைந்துள்ள 01ஆம், 02ஆம், 03ஆம் இலக்க உட்புறக் கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை

2000 ஆம் ஆண்டிலிருந்து எமது சபைக்குச் சொந்தமான கட்டடத்தில் உரும்பிராய் மத்திய சந்தை இயங்குகின்றது என்பதை பொதுமக்கள் கவனத்திற்கு அறியத்தருகின்றேன். மேற்படி சந்தைக்கு ஒரு மைல் சுற்றாடலில் எவ்விடத்திலும் மரக்கறி, மீன் வியாபாரம் செய்வது அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் பொதுமக்களின் கவனத்திற்கு அறியத் தருகின்றேன்.

01. உரும்பிராய் மத்திய சந்தையில் அமைந்துள்ள 03 உட்புறக் கடைகளிலும் வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 19 - 01 - 2001 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணியளவில் திறந்து பரிசீலிக்கப்படும்.
02. கேள்விப்பத்திரங்கள் 18 - 01 - 2001 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 150/- ம் மீளளிப்புச் செய்யப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 2000/-ம் செலுத்துபவர்களுக்கே வழங்கப்படும்.
03. நிரப்பப்பட்ட கேள்விகள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக "தலைவர், வலிகிழக்கு பிரதேசசபை, நீர்வேலி" என முகவரியிடப்பட்டு உறையின் இடதுபக்கமேல் மூலையில் எத்தனையாம் இலக்கக் கடைக்கான கேள்வி எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது இச்சபையின் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும்.
04. கடைகளைத் தெரிவு செய்யும் முன்னுரிமை கூடிய கேள்வி அடிப்படையில் வழங்கப்படும்.
05 தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் கடையைப் பொறுப்பேற்காதுவிடின் அவரது கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது
06. ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
07 மேற்படி கடைகளில் கீழ்வரும் வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
    01 தேநீர்க்கடை / சாப்பாட்டுக்கடை.
    02. மீன் / இறைச்சி / மரக்கறிவகை / மதுபானம் விற்பனை செய்தல்.
08. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
09. ஒவ்வொரு கடையின் ஆகக்குறைந்த கேள்வித்தொகை ரூபா. 50,000/-
10. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வலி-கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
12-01-2001

பூ. குணசிங்கம்.
ஜே. பி. யூ. எம்.
தவிசாளர்,
வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.

(கி/14817)

# ஓராண்டு நினைவலைகள்

மலர்வு: 05 — 04 — 1922



உதிர்வு: 28 — 12 — 1999

## அமரர் இளையதம்பி செல்லையா

திதி: 15 - 01 - 2001

ஆண்டது ஒன்று ஓடித்தான் மறைந்தாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு அகலவில்லை
எங்கள் வாழ்வினை உயர்விக்க உங்கள் ஆசி வேண்டி
இங்கு நாம் அஞ்சலி செலுத்துகின்றோம் இந்நாளில்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

[82853]

# 31ஆவது நினைவு நாள்



தோற்றம்
08 - 11 - 1975

மறைவு
15 - 12 - 2000

## அமரர் நாகேந்திரன் ஜீவா(றொபின்)

(ஈச்சமோட்டை - யாழ்ப்பாணம், சுண்டிக்குழி)

எங்கள் அன்பு மகனே! எங்கு மறைந்தாய்? எங்களை எல்லாம் தவிக்க விட்டு விட்டு விண்ணுலகம் சென்றாயோ? காற்றும் மழையும் கடலும் வானும் மண்ணும் நேற்று மறைந்து போச்சு. நீயில்லா வாழ்வதனால் காற்றுக்குள் காற்றாகிக் கனலாகிப் போனதனால் ஆற்றுக்குள் துரும்பாகி அலைந்து திரிகின்றோம். நிலாவிழிகள் நிலையாகிப் போனதென்ன ? நீட்டிய உன் உடல் வனப்பும் நிமிர்ந்து விட்டதென்ன? பேசிய உன் வாயிதழ்கள் பேசாதிருப்பதென்ன? பிதற்றி அழும் எங்களுக்குக் கிடைத்த விடையென்ன? அன்புமகனே! உன் நினைவால் சத்தியமாக் காத்திருப்போம். சாவை வென்று வருவாய்! ஓடி வருவாயோ!! உள்ளம் மகிழ்ந்தொருக்கால் வாடிய இதயமெல்லாம் மறுபிறப்புக் காண் பதற்கு நல்லுலக வாழ்வில் நல்லவனாய் வாழ்ந்து காட்டி வல்லவனின் இணையடியில் வாழச் சென்றுவிட்ட சத்தியசீலன். எங்கள் றொபின், என்றும் உத்தமனாய் உன்னோடு வாழ உயிர் கொடுப்பாய் இறைவனே.

*உன் துயரால் வாடும்:*
அப்பா, அம்மா, சகோதரர்கள்
அங்கிள் , அன்ரி

*தகவல் :சி.நாகேந்திரன்,*
*றொபின் சைக்கிள் வேக்ஸ்,*
*புதிய புன்னை நீராவி வீகமடு.*

(82877)

## கடைகளில் திடீர் சோதனை

சண்டிலிப்பாய்,ஜன.

பண்டத்தரிப்பு பிரதான வீதியிலும், சந்தைப் பகுதியிலும் உள்ள கடைகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் கடந்த புதன் கிழமை திடீர் சோதனை மேற்கொண்டனர்.

திகதி காலாவதியான கோப்பி பைக்கற்றுக்களும், கட்டியான பழுதடைந்த பால்ரின்கள் ஆகியனவும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப பரிசோதகர் சி.இராசதுரை சங்கானை பொது சுகாதாரப் பரிசோதகர், பொ. சிவரூபன் ஆகியோரால் இப் பரிசோதனை நடத்தப்பட்டது. (ஜ-135)

## சேதங்களை மதிப்பிட குழு அமைப்பு

கோண்டாவில்,ஜன.14

அரியாலைப் பகுதியில் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு மூவர் கொண்ட குழுவொன்று பிரதேச செயலரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் உள்ள மக்கள் இடம் பெயர்வுக்கு உள்ளாகியதுடன் வீடுகள் மற்றும் சொத்துக்களும் பாரிய சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

தற்போது இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா இக்குழுவை நியமனம் செய்துள்ளார்.

உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சமூக சேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அப்பகுதி கிராம அலுவலர்கள் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

மதிப்பீடு வேலைகளைத் துரிதப் படுத்தி முடிப்பதற்கு வசதியாக இரு குழுக்களாக இவர்கள் செயற்படவுள்ளனர்.

(ஜ-86)


*அன்பான நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் உளம் கனிந்தபொங்கல் வாழ்த்துக்கள்.*



அசையாமணி, பூசைமணி,
பஞ்சமணி,
